# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## முதலாம் தவணைப் பரீட்சை– 2019

| தரம் - 11 | வரலாறு - II | மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம் |
|---|---|---|

சுட்டெண் :- ..............................

- ❖ பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
- ❖ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

01)

(அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள் உலகப் புறவுருவப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i) மல்வத்து ஓயா, சுகரதித்த, மகாகம, வளவகங்கை, சொரபொரவாவி, கம்பளை, இரணைமடு, யோதகால்வாய், கோகண்ன, சிலாபம், இப்பன்கட்டுவ, கதிர்காமம். *(12 புள்ளிகள்)*

ii) ரோம், இஸ்தான்புல், கோவா, பாக்குநீரிணை, பர்மா, யப்பான் *(06 புள்ளிகள்)*

(ஆ)

i) கீழே A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையாக உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. பத்தினித் தெய்வக் கோவில் ஒன்றின் திறப்பு விழாவிற்காக தென்னிந்தியாவின் சேர இராச்சியத்துக்குச் சென்ற இலங்கையின் இலம்பகர்ணவம்ச அரசன்.

B. சேனைப் பயிர்ச்செய்கைக்கு விதிக்கப்பட்டிருந்த கெதி அட, கெடுகனக ஆகிய வரிகளை நீக்கிய ஆட்சியாளன்

C. போர்த்துக்கேயரை முல்லேரியாப்போரில் படுதோல்வியடையச் செய்த சீதாவாக்கை ஆட்சியாளன்

D. கி.பி 1602 ஆம் ஆண்டு முதலாம் விமலதர்ம சூரிய மன்னனைச் சந்தித்த ஒல்லாந்து தூதுவன். *(04 புள்ளிகள்)*


- A,B எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

ii) *1.* A இனால் குறித்துக்காட்டப்பட்ட நிர்மாணிப்பின் பெயர் என்ன?

*2.* இந்நிர்மாணிப்பு கண்டெடுக்கப்பட்ட தூபியின் பெயர் என்ன?

*3.* இந்நிர்மாணிப்பினை உருவாக்க பயன்படுத்தப்பட்ட உலோகம் யாது?

*4.* இந்நிர்மாணிப்பு கண்டெடுக்கப்பட்ட இடத்தில் பிறந்ததாக கருதப்படும் பொலன்னறுவையின் ஆட்சியாளனின் பெயர் என்ன?



**படம் A**

*(04 புள்ளிகள்)*

iii) *1.* B எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயர் என்ன?
*2.* மேற்படி கட்டடத்துடன் தொடர்புடைய சமயம் எது?
*3.* இது அமைந்துள்ள இலங்கையின் வரலாற்று நகரம் எது?
*4.* இதனை நிர்மாணித்த தென் இந்திய ஆட்சியாளர்கள் யார்?



**படம் B**

*(04 புள்ளிகள்)*

*02)*

i) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலமக்கள் வாழ்ந்ததாகக் கருதப்படும்
A. வெட்டவெளிவாழிடங்கள் இரண்டினையும்
B. ஈரவலய வெட்டவெளிப் பாசறைகள் ஒன்றினையும் பெயரிடுக? *(03 புள்ளிகள்)*

ii) முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கு குறிப்பிடுக? *(04 புள்ளிகள்)*

iii) முன்வரலாற்றுக் காலத்தில் பின்பற்றப்பட்ட மரணச் சடங்கு முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? *(05 புள்ளிகள்)*

iv) வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் பண்புகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? *(06 புள்ளிகள்)*

*03)*

i) பின்வரும் பதவிப் பெயர்களால் குறிப்பிடப்பட்டவர்களின் பணிகளை அதே ஒழுங்கில் தருக.
A. தொட்டபோஜக
B. மஹலேகம
C. அசஅதெக *(03 புள்ளிகள்)*

ii) கீழே A –D வரை புராதன காலத்தில் கைத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் தரப்பட்டுள்ளன. அக்கைத்தொழில்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.
A. கபர
B. தம்பகர
C. தடிக
D. குபகர *(04 புள்ளிகள்)*

iii) கமிகவின் பணிகள் மூன்று குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? *(05 புள்ளிகள்)*

iv) புராதன இலங்கையில் அரசர்களின் கடமைகள் மூன்று குறிப்பிட்டு இரண்டினை விளக்குக? *(06 புள்ளிகள்)*

*04)*

i) அநுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் மூன்று தருக? *(03 புள்ளிகள்)*

ii) பாரிய குளங்களை அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான காரணங்கள் நான்கு தருக? *(04 புள்ளிகள்)*

iii) குளத்தின் உறுப்புக்கள் மூன்று குறிப்பிட்டு அதில் ஒன்றின் தொழிற்பாடு குறித்து விளக்குக? *(05 புள்ளிகள்)*

iv) புராதன இலங்கையின் பொருளாதாரத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தது. மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? *(06 புள்ளிகள்)*

05)

i) கீழே A,B,C எனத் தரப்பட்ட தேசிய தலைவர்களால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களை அதே ஒழுங்கில் எழுதுக?

A. சுபதளபதி

B. ஆதிபாதன்

C. சங்கதளபதி (03 புள்ளிகள்)

ii) பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் நான்கு தருக? (04 புள்ளிகள்)

iii) கம்பளை இராசதானியின் விஷேட பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

iv) இரண்டாம் பராக்கிரமபாகுவின் அரசியல் பணிகள் இரண்டும் இலக்கிய பணி ஒன்றும் குறிப்பிட்டு விளக்குக? (06 புள்ளிகள்)

*06)*

i) செனரத் மன்னன் தனது பிள்ளைகளுக்காகக் கண்டி இராச்சியத்தினை மூன்று பிரிவுகளாகப் பிரித்தான். அப்பிரிவுகளின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

ii) கண்டி இராச்சியத்தின் பிரதம பிரதானி எனப்பட்ட பல்லே கம்பா பிரதானியாவில் நிர்வகிக்கப்பட்ட நான்கு பிரதேசங்களைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

iii) கண்டி அரசனின் அதிகாரங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

iv) கண்டி இராச்சிய கால நீதிமன்ற நடவடிக்கைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? (06 புள்ளிகள்)

*07)*

i) பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிக் கொள்வதற்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்த ஆங்கிலேயத் தூதுவர்கள் மூவரின் பெயரைத் தருக? (03 புள்ளிகள்)

ii) *1803* ஆம் ஆண்டு பிரித்தானியர் கண்டி மீது படையெடுப்பினை மேற்கொண்டமைக்கான காரணங்கள் நான்கு தருக? (04 புள்ளிகள்)

iii) *1815* இல் கண்டி இராச்சியத்தைப் பிரித்தானியர் கைப்பற்றுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக? (05 புள்ளிகள்)

iv) *1848* சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த காரணிகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக? (06 புள்ளிகள்)

## பகுதி III

08)

i) *12* ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வர்த்தக முன்னேற்றத்துடன் தோற்றம் பெற்ற மத்திய தர வர்க்கத்தினர் ஈடுபட்ட துறைகளில் மூன்றினைத் தருக. (03 புள்ளிகள்)

ii) மறுமலர்ச்சிக்காலத்தில் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

iii) புதியவர்த்தகப் பாதை கண்டுபிடிக்கப்பட்டமைக்கான பின்னணியை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக? (05 புள்ளிகள்)

iv) மறுமலர்ச்சி இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? (06 புள்ளிகள்)

09)

i) பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி முதன்முதலில் ஏற்பட்ட மூன்று துறைகளையும் தருக?
*(03 புள்ளிகள்)*

ii) பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் நான்கு தருக?
*(04 புள்ளிகள்)*

iii) கைத்தொழில் புரட்சி தொடர்பாடல் துறையில் ஏற்படுத்திய வளர்ச்சியை இருகாரணிகளின் அடிப்படையில் விளக்குக? *(05 புள்ளிகள்)*

iv) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட சமூக மாற்றங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? *(06 புள்ளிகள்)*